**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
**ANG MO KIO TAMIL METHODIST CHURCH**

## 45th Curch Anniversary - 6th ஜூலை / July 2025

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Call to Worship — Pastor. Jesudoss Charles

**இறைவணக்கப் பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Prayer — Pastor. Jesudoss Charles

✝ **தொடக்கப் பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

*1. சபையின் அஸ்திபாரம்*
*நல் மீட்பர் கிறிஸ்துவே;*
*சபையின் ஜன்மாதாரம்*
*அவரின் வார்த்தையே!*
*தம் மணவாட்டியாக*
*வந்ததைத் தேடினார்,*
*தமக்கு சொந்தமாக*
*மரித்ததைக் கொண்டார்.*

*2. எத்தேசத்தார் சேர்ந்தாலும்,*
*சபை ஒன்றே ஒன்றாம்;*
*ஒரே விஸ்வாசத்தாலும்*
*ஒரே ரட்சிப்புண்டாம்;*
*ஒரே தெய்வீக நாமம்*
*சபையை இணைக்கும்;*
*ஓர் திவ்விய ஞானாகாரம்*
*பக்தரைப் போக்ஷிக்கும்.*

*3. புறத்தியார் விரோதம்*
*பயத்தை உறுத்தும்*
*உள்ளானவரின் துரோகம்*
*கிலேசப்படுத்தும்*
*பக்தர் ஓயாத சத்தம்*
*'எம்மட்டும்? என்பதாம்*
*இராவில் நிலைத்த துக்கம்*
*காலையில் களிப்பாம்*

*4. மேலான வான காட்சி*
*கண்டாசீர்வாதத்தை*
*பெற்று போர் ஓய்ந்து வெற்றி*
*சிறந்து மாட்சிமை*
*அடையும் பரியந்தம்*
*இன்னா உழைப்பிலும்,*
*நீங்காத சமாதானம்*
*மெய்ச் சபை வாஞ்சிக்கும் .*

✝ **பொதுவான பாவ அறிக்கை** — **சபையார் இணைந்து**
Prayer of Confession — Congregation

**அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம் (பாடலாக)** — **சபையார் இணைந்து**
The Apostle's Creed — Congregation

***சிறுவர் / வாலிபருக்கான ஜெபம்***
Prayer for Children & Youth

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்***
Thanksgiving & Pastoral Prayer

***கர்த்தருடைய ஜெபம் (பாடலாக)***
Lord's prayer

***சபையார் இணைந்து***
Congregation

***திடப்படுத்துதல் ஆராதனை***
Confirmation Service

***புதிய அங்கத்தினரை ஏற்றுக்கொள்ளுதல்***
Inception of New Members

***சிறப்புப் பாடல்***
Special Song

***பாடகர் குழு***
Choir

***காணிக்கை பாடல்***
Offertory Song

***சபையார் இணைந்து***
Congregation

***கர்த்தருக்குக் காணிக்கையிதோ! தம்மையே தந்த***
***கர்த்தருக்குக் காணிக்கை! இதோ!***

***கர்த்தருக்குக் காணிக்கையாய்ப்***
***பத்திலொன்று நான் கொடுப்பேன்,***
***சத்தியக் கிறிஸ்து நாதர்***
***சபையை வர்த்திக்கவேணும்.***

*1. அநியாயம் நீங்க வேணும், - உலகிலே மெய்*
*அறிவு வளர வேணும்,*
*தனியேக மெய்த்தேவனை - நந்தேசத்தில்*
*சகலரும் போற்ற வேணும்,*
*கனிவாய்ப் போதகர் வேதம்*
*கற்றறிந்து சொல்லவேணும்.*
*கணக்காய் இதன் செலவு*
*கட்டி வரவேணும், அய்யா! - கர்த்தருக்குக்*

*2. ஆபிரகாம் பத்திலொன்றையே - மெல்கிசே தேக்குக்கு*
*அனைத்திலும் தந்தையே!*
*மா பிரியமாக வாசித்தேன், இஸ்ரயேல் பெத்தேல்*

*வள்ளற்குச் செய்பொருத்தனையே*
*ஆண்டவர் பரன் அவர்கட்*
*கனைத்தும் ஆசீர்வதித்துத்*
*தாபரம் தமதடி கீழ்த்*
*தந்தளித்த தெல்லாம் கேட்டேன் - கர்த்தருக்குக்*

*3. கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்தேன் - இதோ! இத்தனை*
*கூடினதைக் கொண்டிதோ வந்தேன்,*
*நஞ்சைவிளைவினி லோர்பாகம் - சேர்த்து வைத்தேனான்,*
*நாலாவகை வரத்திற் கொஞ்சம்,*
*புஞ்சை பல போகத்திலும்*
*போட்டு வைத்தே னான்குறுணி*
*புத்தகக் கணக்கில் கண்ட*
*சிந்தனை தொகையுமாச்சு – கர்த்தருக்குக்*

✝ **பூலோகத்தாரே யாவரும்**
Doxology

**சபையார் இணைந்து**
Congregation

✝ **திருமறைப் பாடம்**
Scripture Reading
***ஏசாயா 40 : 21 – 31***
Isaiah 40 : 21 – 31

**திரு. பிரேம்குமார்**
Mr. Premkumar

**அருளுரை**
Sermon

**பேராயர். பிலிப் லிம்**
Bishop. Philip Lim

✝ **ஆயத்தப் பாடல்**
Offertory / Preparatory Song

**சபையார் இணைந்து**
Congregation

***தந்தானைத் துதிப்போமே;***
***திருச் சபையாரே, கவி***
***- பாடிப்பாடி***

***விந்தையாய்***
***நமக்கனந்தனந்தமான,***
***விள்ளற்கரியதோர் நன்மை***
***மிகமிகத்***

*1. ஒய்யாரத்துச் சீயோனே, - நீயும்*
*மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,*
*ஐயனேசுக்குனின் கையைக்*
*கூப்பித் துதி*
*செய்குவையே, மகிழ்*
*கொள்ளுவையே - நாமும்*

*2. கண்ணாரக் களித்தாயே, - நன்மைக்*
*காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து;*
*எண்ணுக்கடங்காத*
*எத்தனையோ நன்மை*
*இன்னுமுன்மேற்*
*சோனாமாரிபோற்*
*பெய்துமே.*

*3. சுத்தாங்கத்து நற்சபையே, உனை*
*முற்றாய்க் கொள்ளவே அலைந்து*
*திரிந்து*
*சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத்*
*தம்மின்*
*ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம்*

*4. தூரம்திரிந்த சியோனே, - உனைத்*
*தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி*
*ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை*
*அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை!*

*5. சிங்காரக் கன்னிமாரே, - உம்*
*அலங்காரக் கும்மி அடித்துப் படித்து,*
*மங்காத உன் மணவாளன் யேசுதனை*
*வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும்*

***திருவிருந்து ஆராதனை முறைமை***
Order of Holy Communion

***அறிவிப்புகள்***
Announcements

† ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

† ***ஆசீர்வாதப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Benediction Song — Congregation

**துதி,கனம், மகிமையுமக்கே**
**ஓ எல்லாமுமே ஓ எல்லாமுமே**
**துதி, கனம், மகிமையுமக்கே**
**ஓ நீரே ராஜாவே, அல்லேலூயா**
**ஸ்தோத்ரம் ஸ்தோத்ரம்**
**ஸ்தோத்ரம் மிக ஸ்தோத்ரம்**

**ஸ்தோத்ரம் ஸ்தோத்ரம்**
**ஓ நீரே ராஜாவே, அல்லேலூயா**
**துதி கனம் மகிமையுமக்கே**
**ஓ யெல்லாமுமே ஓ யெல்லாமுமே**
**துதி கனம் மகிமையுமக்கே**
**ஓ நீரே ராஜாவே.**

† ***சபையார் நிற்கவும்*** / Indicates Congregation standing